பக்கங்கள் 6 விலை சதம் 40

978-5-03
PERIODICALS

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 20 ஐப் ஆண் 24 இதழ் 81
யாழ்ப்பாணம் புதன்கிழமை 3-5-78




## எம் ஜி ஆர் மந்திரி சபையில் புதிய முகங்கள்

(சென்னை)

தமிழ்நாடு அமைச்சரவையில் மேலும் பல புதிய முகங்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர்.

புதிய மந்திரிசபை இம் மாதம் 7ம் திகதி பதவி ஏற்கும் என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் தெரிவித்தார்.

14 பேர் கொண்ட அமைச்சரவையில் முதலமைச்சரின் பொறுப்பிலுள்ள ஒரு சில அமைச்சுக்கள் வேறு சிலரின் பொறுப்பில் விடப்படவுள்ளன என்றும் அவர் கூறினர்.

# குற்றவியல் நீதி ஆணைக்குழு சட்டம்:

# பீலிக்ஸ் தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்

## மாஜி நீதிமந்திரியின் கடிதம் குறித்து பிரதமர் அறிக்கை

(கொழும்பு)

குற்றவியல் ஆணைக்குழு சட்டத்தை இயற்றிய முன்னாள் நீதிஅமைச்சர் திரு பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா இப்போது தாம் அதை இயற்றவில்லை என தம்மைஅந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பார்க்கிறார்- எனவே இதுபற்றி விசாரணை செய்ய, கடந்த ஆட்சிக் கால நடவடிக்கைகளைப்பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள்மிக அவசியமாக உள்ளன' என்று பிரதமர் திரு. பிரேமதாசா நேற்று தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தமக்கு அண்மையில் எழுதிய கடிதம் தொடர்பாக திரு.பிரேமதாசா நேற்று பேரவையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆட்சிக் காலத்தின் போது உருவாக்கப்பட்ட குற்றவியல் நீதி ஆணைக்குழு சட்டத்தை தாம் இயற்றவில்லையென்றும் இதற்கு அமைச்சரவையும் முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் திரு. விக்டர் தென்னக்கோனுமே பொறுப்பு என்று தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

இச்சட்டத்தை அப்போது அமைச்சரவையில் சமர்ப்பித்துப் பேசிய திரு. பீலிக்ஸ், இதை அமைச்சரவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதையிட்டு தாம் பெருமை அடைவதாக கூறியிருந்தார்.

இப்போது அச்சட்டத்திற்கு தாம் பொறுப்பல்ல எனக் கூறியிருப்பது விந்தைக்குரியது

### தஸ்தாவேஜுகள் மறைந்த மாயம்

அத்துடன் இது தொடர்பான தஸ்தாவேஜுகள் நீதி அமைச்சிலிருந்து காணாமல் போய்விட்டது என்றும் நீதி அமைச்சு இப்போது அறிவித்துள்ளது. எனவே கடந்த ஆட்சிக்கால நடவடிக்கைகளைப்பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் விசாரணைகள் மிக அவசியமாகின்றது என்றும் பிரதமர் கூறினார்.

(இ)

## தமிழகத்தில் 'செல்வா' அஞ்சலி

(சென்னை)

உலகின் பல்வேறு நாடுகளில்- தென்னாபிரிக்கா ரொடீசியா போன்ற நாடுகளில் விடுதலை முழக்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. தியாகத்தினால் உரிமைபெற பல்வேறு நாடுகளில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் இலங்கையில் திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலை முழக்கம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சென்னை தியாகராஜநகர் பேருந்து நிலையத்தில் மூதறிஞர் செல்வா முதலாண்டு நினைவாஞ்சலிக் கூட்டத்தில் பேசிய திரு. செஞ்சி இராமச் சந்திரன் எம்.எல்.ஏ. கூறினார்.

இக்கூட்டத்தை, இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கம் ஒழுங்கு செய்திருந்தது. கூட்டத்திற்கு திரு. எம். மலைத்தம்பி தலைமைவகித்தார்.

திரு. இராமச்சந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: 6 மாதங்களுக்கு முன்னர் இலங்கையில் மிகப்பயங்

(6-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் இலங்கை வங்கிகளுக்கு எதிரான வழக்குசெலவுடன்தள்ளுபடி

(கொழும்பு)

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றுக்கு எதிராக புதிய ஊழியர் நியமனம் தொடர்பாக வங்கி ஊழியர் சங்கத்தினால் தொடரப்பட்ட வழக்கு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றில் எழுதுவினைஞர், காசாளர் போன்ற பதவிகளுக்கு புதிய ஊழியர்களை நியமனம் செய்வது சட்டத்துக்கு முரணானது என்று வங்கி ஊழியர் சங்கம் இவ்விரு வங்கிகளுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

நேற்று இவ்வழக்கை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிபதி திரு விக்கினராஜா செலவு தொகையுடன் வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு தொடர்பாக இரு வங்கிகளின் நிர்வாகத்தினருக்கு எதிராக ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த இடைக்கால கட்டளையையும் திரு. விக்கினராஜா தள்ளுபடி செய்தார்.

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ். கச்சேரி ஓய்வூதியபணமோசடி 7 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ் கச்சேரியின் ஓய்வூதியம் வழங்கும் பிரிவில் பண மோசடி செய்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டு இம்மாதம் 11ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியப் பிரிவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 1லட்சத்து 36 ஆயிரம் ரூபா மோசடி தொடர்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெறும் தபாலதிபர்களுக்கு வழங்கப்படும் பணத்தை இவர்கள் மோசடிசெய்து அபகரித்ததாகக் கருதப்படுகின்றது

இவர்களில் மூவர் தங்களை தபாலதிபர்கள் என்று அறிமுகப் படுத்திக்கொண்டதாகவும், இதற்கு ஒருவர் திட்டமிட்டுக் கொடுத்ததாகவும், மற்ற மூவரும் இந்த மோசடிக்கு ஒத்துழைப்புக்கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இம்மோசடிபற்றி யாழ். பொலிஸ் விசேஷ புலன்விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி திரு. இ. அப்பையா விசாரணை செய்தார்' புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை இராசதுரை

[6ம் பக்கம் பார்க்க]

## செப்டம்பர் —டிசம்பருக்குள் உள்ளூராட்சிமன்ற தேர்தல்

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் இவ்வாண்டு செப்டம்பர் மாதத்துக்கும் டிசம்பர் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெறும்.

இவ்வாறு பிரதமர் திரு. பிரேமதாசா நேற்று ஜனாதிபதியின் அலுவலகத்தில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் கூறினார்.

ஐ தே க அரசாங்கம் பதவி ஏற்ற முதலாவது வருட இறுதியின்போது சகல தொகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட வேலைப்பகுதிகள் பற்றி மதிப்பீடு செய்யப்படும் என்றும் திரு. பிரேமதாசா கூறினார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

''வைத்தியர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உகந்த சுத்தமான நல்லெண்ணெய் தொகையாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும். தொடர்புகொள்ளவும்: ராதா ஓயில் மில்ஸ், 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9182

இலங்கைக் கல்வித்திணைக்களத்தினரால் துணைப்பாடநூலாகச் சிபார்சு செய்யப்பெற்றுள்ள இலக்கிய மஞ்சரி IIIஆம் புத்தகம், புத்தம் புதிய பதிப்பாக, அச்சிட்டு வெளியாகிவிட்டது விலை ரூபா 1-50. பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தனிவிற்பனையாளர்கள்: கன்னகம் தனலக்குமி புத்தகசாலை. 9191

ஊரெழுக் கிராமத்தில் நீர்வேலி வீதியின் ஓரத்தில் அமைந்துள்ள சிறிய வைரவர் கோவிலுக்கு எதிராக உள்ள ''அம்புலியாக் கலட்டி'' என அழைக்கப்படும் காணியில் 15 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். 9198, ஈழநாடு, யாழ்ப்பாணம். 9198


I. C. M. A.

Foundation - Section A
Financial Accounting FAI
May 75 to Nov. 77 &
Pilot paper
Seven Question papers
and suggested answers
by
A. Somasundarampillai
B. A. F. C. A.
Rs 25/-
Chartered Accountant
91¼ (95) Stanley Road,
Jaffna.
Percival Hall,
9172 Jaffna.


### வானொலியில் 'பரதேசி'

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை ஒன்றில் எதிர்வரும் சனிக்கிழமை இரவு 9-30 மணிக்கு நெல்லை க. பேரன் எழுதிய 'பரதேசி' என்ற நாடகம் ஒலிபரப்பப்படவிருக்கிறது. (அ)

# ''சமூகசேவையில் ஊறிய மனப்பான்மை வேண்டும்''

## ஏ. ஜி. ஏ. அறிவுரை

(வண்ணார்பண்ணை)

''கிராம அபிவிருத்தி வேலைகளில் கிராமமுன்னேற்றச்சங்கங்களின் பங்குகள், அதிகாரங்கள் கூட்டப்பட்டுள்ளன. இது போன்ற கிராமிய இயக்கங்களின் ஆதரவுடனே இன்றைய அரசு கிராம அபிவிருத்திவேலைகளைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

''எனவேகிராமமுன்னேற்றச் சங்கங்கள் தமது அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்தி கிராமத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளை சிறப்பாக இயக்க முன்வர வேண்டும்''

இவ்வாறு மண்டைதீவில் நடந்த மண்டைதீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமைதாங்கி உரையாற்றிய தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். தம்பிமுத்து தெரிவித்தார்.

மண்டைதீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடந்த இப் பொதுக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கான சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உதவி அரசாங்க அதிபருடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. தம்பிமுத்து மேலும் பேசுகையில் ''கிராம அபிவிருத்தி வேலைகளில் கிராம மக்கள் சகலரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக இயங்கி வருவதன் மூலந்தான் கிராமத் தேவைகளை சிறப்பாகச்செய்ய வாய்ப்புஏற்படும் கிராமத்தினில் சேவைகளைச் செய்யும் போது போட்டி பூசல்கள், தனிப்பட்ட வெறுப்பு விருப்புகள், கட்சி அரசியல் வேறுபாடுகள் தோன்றினால் ஒற்றுமையாக கிராமத்தின்சேவைகளைச் செய்வதில் சிறப்பைக் காண முடியாது'' என்றார். (உ)

'வடபகுதியிலேயே

# சனசமூக நிலைய வளர்ச்சி துரிதம்''

(வண்ணார்பண்ணை)

'நாட்டின் பொருளாதார முன்னேற்றங்களுக்கும், அபிவிருத்திக்கும் சனசமூக நிலையங்களின் பங்கு பயன்படவேண்டும். கடந்த காலங்களில் சனசமூக நிலையங்கள் பொழுதுபோக்குகளுக்கே அதிகமாக பயன்படுத்தப் பட்டுள்ளன. சனசமூக நிலையங்களின் நடவடிக்கைகளில் பொழுது போக்கு ஒரு சிறு பகுதியாகவே இருக்கவேண்டும்.'

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடந்த யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் மகா நாட்டில் உள்ளூராட்சி அமைச்சின் பிரதிநிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய பயிற்சி ஆணையாளர் திரு. தேவரத்தினடான்பேத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடந்த இம் மகாநாட்டில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

திரு. தேவரத்தினடான்பேத் தொடர்ந்து பேசுகையில், 'தற்பொழுது நாட்டில் இயங்கி வரும் சனசமூக நிலையங்களின் வளர்ச்சியையும், சேவைகளையும், முன்னேற்றத்தையும் கணக்கிட்டால் வடமாகாணத்திலேயே இந்த இயக்கம் கூடுதலாக வளர்ந்துள்ளது என்று கூறமுடியும்

''சகல சனசமூக நிலையங்களும் முன்மாதிரியாக இயங்குவதற்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு சனசமூக நிலையங்கள் முன்மாதிரி நிலையங்களாக தெரிந்தெடுத்து அவற்றை இப்புதிய அபிவிருத்தி முன்னேற்றப் பாதையில் வழிநடத்திக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட சனசமூக நிலைய மேற்பார்வையாளர் திரு. கிருஷ்ணசாமி ஒரு சிறந்த சமூக சேவையாளரும் சமூக சேவையில் சிறந்த சிந்தனையுள்ளவருமாவார். உபமட்டத்திலே நடைபெறும் கூட்டங்களில் கூட இவரது கருத்துக்கள்- ஆலோசனைகள் வரவேற்கப்படுவது இயல்பு, இப்படியான ஒருவரை யாழ். மாவட்ட சனசமூக நிலைய

(6-ம் பக்கம் பார்க்க)


# எலிபன்ற் மெற்றல் அன்ட் அலுமினியம் வேக்ஸ்

## பதவி வெற்றிடம்

எமது ஸ்தாபனத்தில் கீழ்க்காணும் பதவிகளில் வேலை செய்வதற்காக தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். திறன், பயிற்சியுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.

தகைமை: வேலை அனுபவ ...கான அத்தாட்சிப் பத்திரம், நற்சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

வெற்றிடங்கள்: ( ) யந்திரத்தில் அலுமினியப் பாத்திரங்கள் செய்யக்கூடியவர்.
( ) வேலை பழகுவோர்.
(3) காவலாளி.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி.

முகாமையாளர்
எலிபன்ற் மெற்றல் அன்ட் அலுமினியம் வேக்ஸ்
அம்பனை, தெல்லிப்பளை. 9202


## கோட்டு விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல: ஈடு/1303.

1. கந்தையா இராசநாயகம்-உபாத்தியாயர்
தெல்லிப்பழை தென் மேற்கு -வழக்காளி

எதிராக

1. வள்ளி முதலி
மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை -எதிராளி.

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டின் 1303-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை அதனுள் இருக்கும் கல் வீட்டையும் 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ம் திகதி (19-5-78) வெள்ளிக்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி 3900/- 30-7-76 தொடக்கம் 24-3-77 வரைக்கும் 2500/-க்கு வருடம் ஒன்றுக்கு 14% வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரைசட்ட வட்டியாக வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும் வழக்குச் செலவு 522 ரூபா 45 சதம்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோவிற்பற்று மூலவை இறை, இணமொல்லை நிலப்பரப்பு 12-ம் குளி மூன்று தசம் ஆறும் [நில பர. 12 குளி 3 6] பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு மாதர் சின்னவிக்கும் மறு பெயருக்குமுரிய வாதனமும் மயிலிட்டி ஊரெல்லையும் வடக்கு சின்னத்தம்பி செல்லத்துரைக்கும் பெண் தெய்வானைப்பிள்ளைக்குமுரிய வாதனமும் பொதுப்பாவிப்பு ஒழுங்கை முடப்பும் மேற்கு முருகன் செல்லையனுக்கும் பெண் பூமணிக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் தெற்கு மூத்ததம்பி சின்னத்துரைக்கும் பெண் இலபாக்கியத்துக்குமுரிய வாதனமும் மாதர் சின்னவிக்கும் மறுபேருக்குமுரிய வாதனமும் இதடங்கலும்.

மூ. விஜயராசன்
நீதிமன்ற விற்பனவு விலைமதிப்பாளையாளர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
30-4-78 9201

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

ஈட்டு/வழ/இல/ஈடு. 11945

இராயப்பு அருட்பிரகாசம். களவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை வாதி

எதிராக

சின்னத்தம்பி செல்லத்துரை;
சுதுமலை மேற்கு, சுதுமலை. பிரதிவாதி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் வழ/இல/ஈடு/11945ல் எனக்கு இரண்டாம் முறையாகக் கொடுபட்ட கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு மே மாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் என்னால் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

, ரூபா 5560/41 சதமும் மேலும் ரூபா 3500/-க்கு 19-8-1970 தொடக்கம் 30-3-1971 வரை 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 492/61 சதமும் இதில் 20-7-72ல் தீர்வைத்தொகையில் கொடுபட்ட ரூபா 1500/- குறைக்கப்படும். மேலும் செலவு முதலியவற்றில் கொடுபட்டவை இருந்தால் குறைக்கப்படும்.

### ஆதன டாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை ''தாலுவராக காடு'' நிலப்பரப்பு ஏழு குளி நாலும் பத்திலேழும் (நில. பர. 7 குளி 4 7/10) வான்பயிர் செய்பயிர்களும் பனைகளும் எல்லை கிழக்கு நாகமணியினுதனம், வடக்கு பொன்னையா கந்தையாவினுதனம், மேற்கு கையொழுங்கையும் பொன்னையாவினுதனம், தெற்கு பொன்னையா கந்தையாவினுதனமும், ஒழுங்கையும் இதடங்கலும் ஒழுங்கைக்குத் தென்புறமாகவிருக்கும் கிணற்றிலும் தூர்வை வழிவாய்க்காலுரித்திலிதற்குரிய பங்கும்.

க சரவணமுத்து
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

38/1, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
10-4-78. 9200


# L. P. காஸ் காட்டும் வழி

★ சுகாதாரத்திற்கு ★ நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு ★ பணத்தை சேமிப்பதற்கு ★ பாத்திரத்தில் கரி பிடிக்காமல் எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு ★ உணவின் ருசி கெடாமல் இருப்பதற்கு ★ வீட்டு வேலைக்கு ஆள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்கு ★ சமையல் அறையை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு இன்றே பாவிக்கத் தொடங்குங்கள். L. P. காஸ்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

எஸ். பி. சாமி அன் கோ.
193, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7025

தலைமைக் காரியாலயம்,
72, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
போன்: 22640.

ஈழநாடு
The Eelanaadu

## ஆப்கான் புரட்சி

ஆப்கானிஸ்தானில் மற்றொரு இராணுவப் புரட்சி நடந்து முடிந்திருக்கிறது. புரட்சி மூலம் இராணுவ ஆட்சியைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தான் நேற்றுமுன்தினம் ஜனநாயகக் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. சாதாரண பிரஜையான பழம்பெரும் கம்யூனிஸ்டான நூர்முகம்மது டரக் ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாகவும் பிரதம மந்திரியாகவும் பதவியேற்றிருக்கிறார். ஜனப் டரக் தலைமையிலான புரட்சிச்சபை சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானின் புதிய அரசாங்கத்தை அதன் அயல்நாடான சோவியத்யூனியன் முதலில் அங்கீகரித்திருக்கிறது.

முடியாட்சியின் கீழிருந்து வந்த ஆப்கானிஸ்தானில் ஐந்து வருடங்களுக்கு முன் புரட்சிமூலம் ஜனப் தாவூத் ஆட்சியைக் கைப்பற்றினார். அங்கு குடியாட்சி மலருமென்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜனப் தாவூத்தும் எதேச்சாதிகாரப் போக்கில்தான் போய்க்கொண்டிருந்தார்.

ஆப்கானிஸ்தானில் வறுமையை நீக்குவதற்கும் நாட்டை முன்னேற்றுவதற்கும் குடியாட்சியில் ஜனப் தாவூத் நடவடிக்கை எடுப்பாரென்றே மக்கள் எதிர்பார்த்தனர்.

எந்த வல்லரசுகளுடனும் இணைந்துகொள்ளாத கூட்டுச்சேராக் கொள்கையில் ஜனப் தாவூத் ஆட்சிசெய்து வந்தாராயினும் நாட்டை முன்னேற்றுவதற்கும் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் அவர் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

இது இராணுவப் புரட்சிக்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. ஜனப் தாவூத்தும் அவரது குடும்பத்தினரும் மந்திரிகள் சிலரும் புரட்சியின்போது படுகொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

சாதாரண பிரஜையான நூர்முகம்மது டரக் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் நியமிக்கப்பட்டிருப்பது ஆப்கானிஸ்தானில் குடியாட்சி மலரும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டுவதாகும்.

ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனம்படுத்தப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானின் புதிய ஆட்சியும் கூட்டுச்சேரா நடுநிலைக் கொள்கையே தமது கொள்கை என்று அறிவித்திருக்கிறது.

முடியாட்சியிலும் சரி அதன் பின் நடந்த புரட்சிகளின் பின்னரும் சரி ஆப்கானிஸ்தான் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. நாடு பின்தங்கிய நிலையிலேயே இருந்துவருகிறது.

மக்களைப் பொறுத்தவரையில் நடுநிலைக் கொள்கையென்றாலென்ன வேறெந்தக் கொள்கையானாலென்ன, தங்கள் வறுமை நீங்கவேண்டும்; பிரச்னைகள் தீரவேண்டும்; நாடு முன்னேறவேண்டுமென்பது தான் அவர்கள் கவலை.

# ஈழத்து எழுத்தாளர் தமது நூல்களை இந்தியாவில் பிரசுரிக்க வேண்டும்

## சிவபாதசுந்தரம் ஆலோசனை

ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது தமிழகத்தில் வாழ்ந்துவருபவரும் அங்கு பாரதீய ஞானபீடம், சாகித்திய அகடமி ஆகியவற்றின் இலக்கியக் குழுவில் ஆலோசகராகவிருந்துவருபவருமான எழுத்தாளர் திரு. சோ. சிவபாதசுந்தரம் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் இலங்கை எழுத்தாளர்களையும் இந்திய எழுத்தாளர்களையும் ஒப்பு நோக்கிய சொற்பொழிவு ஒன்றை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த மாதம் 29ந் தேதி நிகழ்த்தினார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத்திற்குக் கலாநிதி பொ. பூலோகசிங்கம் தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையின்போது இன்று ஈழத்தில் பல நிறுவனங்களின் ஆலோசனைக் குழுக்களில் அங்

### கொழும்புக் கடிதம்

கம்வகிக்கக்கூடாதவர்கள் எல்லாம் இடம்பெற்றிருக்கும் இக்காலகட்டத்தில் ஈழகேசரியில் வளர்ந்து இலங்கை வானொலியின் தமிழ்நிகழ்ச்சி அதிகாரியாக இருந்து பல நூல்களை எழுதி ஆராய்ச்சிசெய்த அனுபவசாலியான ஒருவர் இந்தியாவில் பாரதீயஞானபீடத்திலும் சாகித்திய அக்கடமியிலும் ஆலோசகராக இருப்பது மிகவும் பொருத்தமானதே" என்றார்.

**சிவபாதம் பேச்சு**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. சோ. சிவபாதசுந்தரம் பேசுகையில், "இருபது ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த நாடாகிய இலங்கையில் காலடி எடுத்து வைத்திருக்கிறேன். இலக்கியத்துறையைப் பொறுத்தவரையில் பல பழைய நண்பர்கள் இன்றும் அப்படியே இருக்கக் காண்கிறேன். புதியவர்கள் சிலர் தோன்றியுள்ளார்கள். மூன்றுவகை எழுத்தாளர்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. பத்திரிகைகளின் வியாபார நோக்கத்தைப் புரிந்துகொண்டு (குமுதம், ஆனந்த விகடன் போன்றவைக்கு) அவற்றிற்கு ஏற்றவாறு கதைகளையும் கவிதைகளையும் எழுதிக்கொண்டிருப்பவர்கள் இவர்கள் பெயர் பிரபலத்தை மட்டும் கண்ணாகக் கொண்டவர்கள். இன்னொருசாரார் ஆங்கிலத்தையும் தமிழையும் நன்கு படித்துக் கல்வியின் காரணமாகத் தரமான விஷயங்களை மட்டும் எழுதிக்கொண்டிருப்பவர்கள் மூன்றுவது ரகத்தினர் புதிய தத்துவங்களையும், கோட்பாடுகளையும் பரிசோதனைகளையும் எழுதி வாசகர்களைத் தமது கருத்துக்களை ஏற்கும்படி வற்புறுத்துகின்றனர். உண்மையாய் எழுதப்படும் பொருளில் தெளிவு இருக்குமானால் ஒருவர் எந்த மொழியிலும் எப்பொருளையும் மிக இலகுவாகச் சொல்லிவிடலாம். உள்ளத் தெளிவு எழுத்தாளனுக்கு மிக மிக அவசியம்.

**ஈழத்து எழுத்தாளர்க்கு ஓர் ஆலோசனை**

"விகிதாசாரத்தைப் பொறுத்து இலங்கையில் படித்தவர்கள் 80 சதவீதமும் இந்தியாவில் 39 சதவீதமும் உள்ளார்கள். ஆனால் சனத்தொகை மட்டத்தில் இந்தியாவில் விற்பனைத் தொகை அதிகம். இலங்கை எழுத்தாளர்கள் கிணற்றுத்தவளைகளைப்போன்று தமது நூல்களைத் தமது நாட்டிலேயே பதிப்பித்துவிட்டால் போதும் என்று எண்ணாமல் சென்னையில் பிரசுரகர்த்தர்களை நாடவேண்டும். இதற்குவேண்டிய ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்வதற்கு நான் என்றும் தயாராக இருக்கிறேன்.

**மொழிநடை பிரச்னையாயிராது**

"தரமானதை ஏற்றுப் பிரசுரிக்கச் சென்னையிலும் மதுரையிலும் பல பிரசுரகர்த்தாக்கள் தயாராகஇருக்கிறார்கள். யாழ்ப்பாணத் தமிழில் எழுதினால் தமிழகத்து வாசகர்கள் நிராகரித்து விடுவார்களோ என்று நீங்கள் அஞ்சவேண்டாம். பொருள்தெளிவாக இருந்தால் அவர்கள் மொழி நடையைப் பற்றிப் பரவாய்பண்ணமாட்டார்கள். சமீபத்தில் இங்கிருந்து எனக்கு அனுப்பப்பட்ட நாவல்களான 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது', 'நிலக்கிளி', 'காட்டாறு' போன்றவற்றை எனது நண்பர்கள் பலர் வாசித்து அதன் தமிழை நன்குபுரிந்து ஏற்றுக்கொண்டார்கள். இனிமேலாவது ஈழத்து எழுத்தாளர்கள் தமது படைப்புக்களைச் சென்னையில் கொண்டுவந்து பதிப்பித்து உலக இலக்கியச் சந்தையில் அவற்றை விற்பனைக்குவிட வேண்டும். இன்று இங்குள்ள பல எழுத்தாளர்கள் அவசரம் அவசரமாகப் பத்திரிகைத் தேவைகளுக்கேற்றவாறு இலக்கியச்சுவை குன்றிய படைப்புக்களைப் படைக்கின்றார்கள். இது வேதனைக்குரியது. எழுத்தின் அந்தஸ்தை உணர்ந்து பதிப்பிக்க முன்வரவேண்டும்.

**ஈழகேசரி**

"ஈழகேசரி" பத்திரிகைக் காலத்தில் பல சிறந்த எழுத்தாளர்களை அது தோற்றுவித்தது. தரமான இலக்கியச் சர்ச்சைகளுக்கும் இடமளித்தது. ஈழத்து வாசகர்கள் தாரதம்மியம் கண்டு நூல்களைப் படிப்பது போன்று இந்தியாவிலும் தாரதம்மியம் கண்டு படிக்கிறார்கள். இங்கு வெளிவரும் நூல்கள், சஞ்சிகைகள் வாசகர்களின் பசியைப் போக்குவதற்குப் போதாது. ஆகவேதான் எல்லாவிதமான குப்பைகளையும் வாங்கிப் படிக்கிறார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் சில பத்திரிகைகளை வாங்கி வாசித்துவிட்டுத் திட்டுகிறார்கள். திட்டுவதற்கென்றே வாங்குகிறார்களா என்று நான் யோசிப்பதுண்டு.

**கு. பா. ரா.**

**புதுமைப்பித்தன் நூல்கள் மறுபிரசுரம்**

"குமுதம் ஐயாயிரம் பிரதிகளும், இதயம் பேசுகிறது மூவாயிரம் பிரதிகளும் இங்கு தற்போது இறக்குமதி செய்யப்படுவதாக அறிகிறேன். இவற்றை லட்சக்கணக்கான வாசகர்கள் படிக்கிறார்கள். ஜெயகாந்தன் எழுதும் கட்டுரை ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் சன்மானம் கொடுக்கிறார்கள். புதுமைப்பித்தன், கு. பா. ராஜகோபாலன் போன்ற பழைய எழுத்தாளர்களின் நூல்கள் மதுரைமீனாட்சி பதிப்பகம் மூலமாக மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன. புதுமைப்பித்தனின் நூல்களுக்கான பதிப்புரிமை விஷயத்தில் இருந்த சிக்கல்கள் காரணமாகத்தான் இத்தனை காலதாமதம் ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது பதிப்புரிமை முற்றாக அவரது மனைவியாருக்கு வந்துள்ளது. எனவே மீனாட்சி பதிப்பகத்தார் தாம் பதிப்பிக்கும் நூல்களுக்குரிய ரோயல்டியை அவருக்குக் கொடுக்கின்றார்கள்.

**ஈழத்து நூல்கள் இந்தியா செல்வதில்லை**

"தமிழ் நாட்டில் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்கள் தாம் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் (தீசிஸ்) தலைப்புக்களாக 'அகிலனின் நாவல்கள்', 'நா. பார்த்தசாரதியின் கதைகள்' என்பன போன்ற விஷயங்களையே அதிகம் தெரிவு செய்கின்றார்கள். வரலாற்று விஷயங்களையும் முடிவு தெரிவிக்கக்கூடிய விஷயங்களையும் எழுதுபவர்கள் மிகவும் குறைவு. இலங்கையின் இலக்கியத்துறை ஆக்க முயற்சிகளைப்பற்றி அங்கே தெரிந்தவர்கள் மிக மிகக் குறைவு. காரணம் வெறுப்பல்ல. அறியாதிருத்தலே. அதாவது இங்கிருந்து நூல்களோ சஞ்சிகைகளோ இந்தியாவிற்குப் போவதில்லை. இந்தக் குறையை நீக்கிவிட்டால் எமது எழுத்தாளர்களைப்பற்றி இந்தியாவில் அதிகம் தெரிந்துகொள்ள வாய்ப்புண்டு.

இலங்கை வாசகர்களைப் பொறுத்தவரையில் இறக்குமதியாகும் எல்லாச் சரக்குகளையும் வாசிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் சில சஞ்சிகைகள் இருவர்களின் மனவளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய செய்திகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கின்றன. இவற்றை விலக்கித் தரமான சஞ்சிகைகள் நூல்களைமட்டுமே வாசகர்கள் ஏற்றுக்கொள்ள

**நெல்லை க. பேரன்**

வேண்டும். இந்தியாவில் நானும் நண்பர் சிட்டியும் சேர்ந்து எழுதிய நாவல் சம்பந்தமான ஆராய்ச்சி நூலில் கூடுமானவரை வரலாற்றுரீதியான உண்மைகளைத் தெரிவித்திருக்கிறோம். இவை பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கும் பயன்தரக்கூடியவை ஆகும்"

தமிழ்ச் சங்க இலக்கியக் குழுச் செயலாளர் திரு சபா. ஜெயராசா நன்றியுரை கூறினார். மிகவும் கலகலப்பாக நடைபெற்ற இந்த இலக்கியக் கூட்டத்திற்குப் பல பழைய எழுத்தாளர்களும், புதிய எழுத்தாளர்களும், விமர்சகர்களும் வருகைதந்திருந்தனர். (ஈ)

## நினைவுக்கூட்டம் நடத்த ஏற்பாடு

[கொழும்பு]

கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தின் ஆதரவில் மறைந்த எழுத்தாளரும் நடமாடும் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தவருமான இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களுக்கு ஞாபகார்த்தக் கூட்டமொன்றினை ஏற்பாடு செய்யும் பணியில் கழகத் தலைவர் திரு. மு. பொன்னம்பலம், பொதுமக்கள் தொடர்புச் செயலாளர் திரு. நெல்லை க. பேரன் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். (ஈ)

புதிய ஆட்சி மக்களின் பிரச்னையைத் துரிதமாகத் தீர்ப்பதில் ஈடுபடாவிட்டால் மீண்டும் சரித்திரம் திரும்பலாம்.

இந்தநாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க

# இடதுசாரி ஐக்கிய முன்னணியினாலேயே முடியும்

## மேதினக் கூட்டத்தில் கொல்வின்

[கொழும்பு]

"இந்த நாட்டின் பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் அவற்றை ஐக்கிய இடதுசாரி முன்னணி ஒன்றினாலேயே தீர்த்துவைக்க முடியும்."

இவ்வாறு டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெற்ற ஐக்கிய இடதுசாரி முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

எந்தக் கட்சியிலிருந்தாலும் இந்த நாட்டின் சர்வாதிகார ஏதேச்சாதிகாரங்களுக்கு எதிராகப் போராடுவதற்குச் சகல முற்போக்குச் சக்திகளும் ஒன்றிணையவேண்டும் என்றும் கூறிய டாக்டர் கொல்வின் சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஏனைய முற்போக்குச் சக்திகளுடன் இணையவும் ஐக்கிய இடதுசாரி முன்னணி தயாராக உள்ளது என்றும் கூறினார்.

முதலாளித்துவக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலோ, ஐக்கியதேசியக் கட்சியிலோ இந்நாட்டை முன்னேற்ற முடியாது. நாட்டின் இன்றைய கீழ்நிலைக்குக் காரணம் இந்த இரு கட்சிகளுமே ஆகும் என்றும் டாக்டர் பெரேரா கூறினார். (ம-இ)

## என். எம். இல்லாது கூட்டம்

(கொழும்பு)

லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் இணைந்து கொழும்பில் ஐக்கிய இடதுசாரிமுன்னணி சார்பில் நடத்திய மேதினக்கூட்டத்தில் சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கலந்துகொள்ளவில்லை. (ம-இ)

**மணிவாக்கு**

நல்லகாலம் நம்காலிலே வந்து விழாது. நாம்தான் அதைநோக்கிக் கால்கடுக்க நடக்கவேண்டும்.

—மு. கருணாநிதி

# "இஸ்ரேலுக்காக எதையும் செய்யத் தயார்"

## ஜனாதிபதி கார்ட்டர் அறிவிப்பு

வாஷிங்டன், மே 2

"இஸ்ரேலுடன் அமெரிக்கா ஆழ்ந்த நட்புக் கொண்டுள்ளது. அதன் நலனுக்காக அமெரிக்கா எதையும் செய்யத் தயாராக இருக்கிறது" என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டு 30 ஆண்டுகள் பூர்த்தியாகியதையொட்டி வெள்ளை மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. கார்ட்டர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உதவவேண்டிய கடமைப்பாடு அமெரிக்காவுக்கு உள்ளது என்றும் அவர் சொன்னார்.

இவ் வைபவத்தில் இஸ்ரேலிய பிரதமர் திரு. பெகின் பேசுகையில், "அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்குமிடையே உள்ள நட்புறவு பிரிக்கமுடியாதது" என்றார். (உ)



# "தொழிலாளர் புரட்சியே சுபிட்சம் அளிக்கும்"

### — ரோஹண விஜயவீர

(கொழும்பு)

"சுதந்திரக்கட்சி அரசாங்கத்தைப்போலவே இன்றைய அரசாங்கமும் முதலாளித்துவ பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்று ஜாதிக விமுக்திப்பெரமுண தலைவர் திரு. ரோஹண விஜயவீர நேற்று கொழும்பில் நடைபெற்ற மேதினவிழாவில் பேசுகையில் குற்றஞ்சாட்டினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இந்த நாட்டில் சுபீட்சம் ஏற்பட தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சியே வழி வகுக்கும்; இதைத் தொழிலாளர் வர்க்கம் உணர்ந்து கொள்ளவேண்டும் என்றார். (உ)

## பாவனையாளர் கஷ்டம்

(உடுப்பிட்டி)

கட்டைவேலி - நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சில கிளைகளில் பாவனைப் பொருட்களைச் சுற்றிக் கொடுப்பதற்கான கடதாசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பாவனையாளர்கள் கஷ்டம் அனுபவித்து வருகின்றனர். (உ)

இத்தாலியில் மேதினம்:

## பயங்கரவாதிகளுக்கு எதிரான கோஷம்

மாஸ்கோ, மே 2

மாஸ்கோவில் வழக்கம்போல் செஞ்சதுக்கத்தில் மே தினம் கொண்டாடப்பட்டது.

கிரெம்ளின் மாளிகையில் இருந்து ஜனாதிபதி பிரஷ்னேவும் ஏனைய தலைவர்களும் ஊர்வலத்தைப் பார்வையிட்டனர். சீனா, பாரிஸ், இத்தாலி ஆகிய நாடுகளிலும் மே தின விழாக்கள் கொண்டாடப்பட்டன.

இத்தாலியில் நடைபெற்ற மேதினவிழாவில் செஞ்சேனை பயங்கரவாதிகளுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன. (உ)

## ஆப். மந்திரிசபை

காபூல், மே. 2

ஆப்கானிஸ்தானில் 20 மந்திரிகள் கொண்ட மந்திரிசபை அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் நூர் முகமது டாராகியே இருப்பார். (உ)

# "ஏழைகள் வாழ்வு உயர அரசுடன் ஒத்துழையுங்கள்"

## எதிர்க்கட்சிகளுக்கு எம். ஜி. ஆர். கோரிக்கை

சென்னை, மே, 2

"ஏழை, எளிய மக்களின் வாழ்வு உயர அரசுடன் ஒத்துழையுங்கள்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எதிர்க்கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று சென்னையில் நடைபெற்ற மேதினவிழாவில் பேசுகையிலேயே முதல்வர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

### வன்முறை தகாது

திரு. எம். ஜி. ஆர். மேலும் பேசுகையில், தொழிலாளர்கள் தமக்குள் கட்டுக்கோப்பு உண்டு என்பதற்காக வன்முறைகளில் இறங்கித் தொல்லைகளை ஏற்படுத்தலாமா?

தொழிலாளரின் நியாயமான உரிமைகளை அரசு வழங்கத் தயங்காது.

தொழிற்சங்க நடவடிக்கை என்று கூறி தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபடுவதைக் கைவிடவேண்டும்" என்றார்.

### நன்மைதரும் திட்டங்கள்

போக்குவரத்து ஊழியர்களுக்கு நன்மைதரும் பல திட்டங்களை இவ்விழாவில்பேசுகையில் அவர் அறிவித்தார்.

பல் சாரதிகளுக்கு இலவசமாக 'கூலிங் கிளாஸ்' வழங்கப்படும் என்றும் அவர்களது பிள்ளைகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமென்றும் திரு. எம். ஜி. ஆர். அறிவித்தார்.

மேலும் சில நன்மைதரும் திட்டங்களையும் அறிவித்த முதலமைச்சர் இதனால் அரசுக்கு பல லட்சரூபா நஷ்டம் ஏற்படுமென்றாலும் தொழிலாளர் நலனுக்காக இவை செயற்படுத்தப்படும்" என்றார். (உ)

# "ஜனதா கட்சி அடிப்படைக் கொள்கையில் மாற்றமில்லை"

## மேதின விழாவில் தலைவர்கள் அறிவிப்பு

புதுடில்லி, மே. 2

ஜனதாகட்சியின் அடிப்படைக்கொள்கைகளில் மாற்றமோ, கருத்து வேறுபாடோ இடையாதென்று ஜனதா கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர்.

புதுடில்லியில் நடைபெற்ற மேதினவிழாவில் பேசுகையில் பிரதமமந்திரி திரு மொரார்ஜி தேசாய், பாதுகாப்பு மந்திரி திரு. ஜெகஜீவன்ராம், வெளிவிவகாரமந்திரி திரு.வாஜ்பாய், ஜனதாகட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

ஜனநாயக ரீதியில் தொழிலாளர் நலன் பேணுவதற்கு ஜனதா அரசு ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயற்படுத்துமென்று இவர்கள் உறுதியளித்தனர். (உ)


## விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

# "அம்புஷ் 25"

## கிருமிநாசினி மூலம் வெங்காயத்தில் பச்சைப்புழுத் தாக்கத்தை கட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தில் பச்சைப்புழுத்தாக்கம் (SPODOPTERA) மிகவும் மோசமாக உள்ளது. அதற்குத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனே எடுக்காவிடில் உங்களது முழுப்பயிரும் நாசமாகிவிடும்.

வெங்காயம் முளைத்த நாளில் இருந்து "அம்புஷ் 25" விசிறுங்கள். தொடர்ந்து 30 நாட்களுக்கு 5 நாட்கள் இடைவெளியில் விசிறுதல் வேண்டும். 30 நாட்களின் பின்னர் 14 நாட்கள் இடைவெளியில் விசிறல் வேண்டும்.

அம்புஷ் 25 பச்சை புழு முட்டைகளை அறவே அழிக்க வல்லது. ஆகவே நீங்கள் தாமதியாது அம்புஷ் 25ஐ விசிறுங்கள். ஒரு அவுன்ஸ் அம்புஷ் 25 மருந்தை 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும். இக்கலவையுடன் ஏதாவது ஒரு ஒட்டும் தன்மையுடைய மருந்தினையும் கலந்து விசிறவும். ஒரு கலன் கலவையுடன் ஒரு அவுன்ஸ் ஒட்டும் மருந்தினைக் கலக்கவும்.

"அம்புஷ் 25" மருந்தினை மாத்திரமே பாவியுங்கள். வேறு எவ்வித கிருமிநாசினிகளுடனும் கலக்க வேண்டாம். அம்புஷ் 25ஐ அதிகாலையிலோ அல்லது மாலையிலோ விசிறவும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளுங்கள் :

CIC

கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,

த. பெ. இலக்கம் 352,

கொழும்பு - 1.

**நாகம்ஸ்** (கன்னுகம்) தினசரி: 6-45, 10-00 விஜயகுமார் நடித்த **தாயில்லாக்குழந்தை**

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 6-30, 9-30 சிவாஜி-ஜெயலலிதா **கலாட்டா கல்யாணம்**

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி — விஜயா **கிரகப்பிரவேசம்** (கலர்)

**லிடோ** போன்: 7692 (யாழ். நகர்) எம். ஜி. ஆர்.—அஞ்சலிதேவி **மர்மயோகி**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த **ஜானகி சபதம்**

**Regal** (Jaffna) 2nd Crowded Week
Daily 4-45, 7-00 and 9-30 p.m.
TONY CURTIS ROGER MOORE in
**SPORTING CHANCE**
(Color) (Spy Film)

வெற்றிகரமான 2-வது மாதம்
**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ நடித்த **ஊருக்கு உழைப்பவன்**

கடைசி இரு தினங்கள் மட்டும்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரிகின்ற
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா நடித்த **விக்கிரமாதித்தன்** (புதிய பிரதி)
5ந் திகதி முதல்
முத்துராமன், ஸ்ரீவித்யா, சந்திரகலா நடித்த **காலங்களில் அவள் வசந்தம்**

5-வது வெற்றி வாரம்
**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா **வாடைக்காற்று**

சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த **நல்லநேரம்**

**Rio** (Jaffna) (Phone: 7607) Now showing
To all Patrons Newly Rectifed Sound System
By Siwclair Radionics
**Man in the Iron Mask**
(Family Entertainment)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7368: தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
4-வது கடைசி வாரம்
சிவாஜி நடிக்கும் **கந்தன்கருணை** ஈஸ்ட்மென் கலர்
மே. 6-ம், 7-ந் திகதி சனி, ஞாயிறு காலை 8-30 மணிக் காட்சி மட்டும்.
**THE THREE FAT MEN**


# "தமிழர்தாயகம் காக்கும் போரில் கூட்டணியுடன் இணைவோம்"

## மேதின விழாவில் வி. பி.

[யாழ்ப்பாணம்]

"செந்தமிழர் இயக்கம்தான் ஏற்றுள்ள மாக்ஸிய - லெனினிஸ கோட்பாடுகளின் அடிப்படையில் தாம் முன்வைக்கும் இனத்தனித்துவமோ முழுமையான சுயநிர்ணய உரிமையோ வையோ எந்த வகையிலும் தமிழினத்தின் தனித்துவத்தையும் இறைமையையும்தாயகம் காக்கும்போராட்டத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து சுதந்திர இலட்சியத்திற்காக தோளோடுதோள் நின்று போராடுமே தவிர தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மாறாகச் செந்தமிழர் இயக்கம் செயற்படாது"

இவ்வாறு நேற்றுமுன்தினம் தமிழ்த் தொழிலாளர் மேதின விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் கூறினார்.

கூட்ட ஆரம்பத்தில் தமிழ்த் தேசிய கீதத்தைத் திரும்தி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பாட அதைத் தொடர்ந்து தொழிலாளர் கீதத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

திரு. வி. பி. தொடர்ந்தும் கூறியதாவது: இன்று உலகெங்கணும் தொழிலாளர்தினமான மேதினம் கொண்டாடப் பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் மேதினத்தைக் கொண்டாடுகின்றார்கள். நாம் எமது பிரதேச சுயநிர்ணய உரிமை பெற்ற இனமாகமாற வேண்டுமென்பதற்காக இன்று இந்த ஐக்கியத்தைப் பூண்டுள்ளோம். தொழிலாளர் சக்தி மிகப் பெரிய சக்தி. எனவே இணைந்துள்ள தொழிலாளர் சக்தி இழந்த தாயகத்தை மீண்டும் திருமென்பதில் ஐயமில்லை.

இன்றும் சில தொழிலாளர்கள் வேறு இயக்கங்களுடனும் தொழிற்சங்கங்களுடனும் இணைந்திருக்கிறார்கள். எவர் எந்த இயக்கங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அந்த இயக்கங்கள் தமிழினத்தை தேசிய இனமாக - சுயநிர்ணய உரிமைபெற்ற இனமாக ஏற்றுக் கொள்ளத் தயாரா எனக் கேட்டுக் கொள்கிறோம்.

"இன்று பாஸிஸ ஆட்சி தலைதூக்குகின்ற சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இதை முறியடிப்பதற்கு ஒன்றுபட்ட தொழிலாளர் சக்திகள்-மாணவ சக்திகள் முன்வர வேண்டும்.

"நான் மாக்ஸோ லெனின் எனச் சிலர் கூறி வருகின்றார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் யாருடைய கைக்கூலியாகவும் வாழ்ந்தவன் இல்லை —வாழப்போகின்றவனும் இல்லை. அப்படி வாழவேண்டிய அவசியமும் எனக்கில்லை. என் தனிப்பட்ட வாழ்விலும் சரி, பொது வாழ்விலும்சரி ஒரு தமிழ் தொழிலாளியின் தொண்டனாகவே வாழவிரும்புகிறேன். தமிழினத்தைத் தேசிய இனமாக எந்த அணியும் அங்கீகரிக்கவேண்டும்.

"எமது இயக்கம் ஒரு அரசியல் இடதுசாரிகளுக்கு இடையிலும், தமிழினத்தின் ஜனநாயகசக்திகளுக் கிடையிலும் நிலையான நட்பைதொடர்ந்து வளர்த்து அதன் அடிப்படையில் இனவிடுதலையையும்-பொருளாதார சமத்துவத்தையும் ஒரே வேளையில் காணவேண்டுமென்பதற்காகவே தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒன்றுபட்டு அதன் இலட்சியத்திற்காகப் போராடவே எமது இயக்கம் ஒன்றிணைய முன்வந்துள்ளது. கூட்டணியுடன் நாம் இணைவது ஆத்மசுத்தியுடன்" என்றார். (ஈ-உ)

# "தமிழ்த் தொழிலாளர் ஒற்றுமை இலட்சியத்தில் வெற்றி தரும்"

### — மு. ஆலாலசுந்தரம்

[யாழ்ப்பாணம்]

"தமிழ்த் தொழிலாளரிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை தமிழ் ஈழ இலட்சியம் வெற்றிதருமென்பதை உறுதிப்படுத்துகிறது" என்று யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேதின விழாவில் மேதின அமைப்புக்குழுத்தலைவர் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த ஆண்டு நாம் கொண்டாடுகின்ற மேதினவிழா இதுகாலவரை நாம் கொண்டாடிய மேதின விழாக்களைவிட வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்ததாகும்.

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் இழந்த உரிமைகளைப் பெற்று விடுதலை பெற்ற இனமாக வாழவேண்டும் என்பதில் தன்மானமும் பகுத்தறிவுமுள்ள எந்தத்தமிழ் தொழிலாளருக்கும் சந்தேகமிருக்க முடியாது. இந்நாள் வரையில் பல்வேறு அரசியல் கொள்கைகள் காரணமாக பிளவுபட்டும் பிரிந்தும்நின்ற தமிழ்தொழிலாளர்கள் தொழிற்சங்கரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் இணைந்து ஒரே அணியில் திரண்டு தமிழினத்தின் விடுதலைக்காக தங்கள் உரிமைகளுக்காக போராட முன்வந்திருக்கின்ற நிலை நாம்காணவிரும்புகின்ற தமிழ்ஈழம் வெகு தொலைவில் இல்லையென்பதை எடுத்துக்காட்டுகிறது.

விடுதலை பெற்ற உலகநாடுகள் அனைத்திலும் தொழிலாளர் சக்தி ஒன்றினால்தான் விடுதலை கிட்டியிருப்பதை நாம் மறக்கமுடியாது. எமது தமிழ் ஈழ விடுதலைப்பணிக்கும் தமிழ் தொழிலாளரின் சக்தியே அவசியமானது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இன்றைய ஒன்றுபட்ட தமிழ் தொழிலாளர் மேதினம் தமிழ்தொழிலாளர் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்ற ஒற்றுமையையும் விடுதலை வேட்கையையும் தமிழ் ஈழம் கிடைக்கப்போகும் சாத்தியக் கூறுகளையும் தெளிவுறக் காட்டுகிறது". [ஈ-உ]

விவசாயிகளிடம்

# ஒரேவேளை இரு வரிகள் அறவிடப்படுகின்றனவாம்

[உடுப்பிட்டி]

"விவசாயிகளிடமிருந்து அவர்கள் விவசாயம் செய்யும் காணிகளுக்குக் கிராமச்சபையும், கமத் தொழிற்சேவை நிலையமும் வரியறவிட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் ஒரே நேரத்தில் இரு வரிகளைச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஏதாவதொரு சபை மாத்திரமே இவ்வரியை அறவிட வேண்டும்' இவ்வாறு கோரும் தீர்மானம் உடுப்பிட்டிக்கிராம சபை வரியிறுப்பாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

தற்பொழுது உடுப்பிட்டிக் கிராம சபையின் சோலைவரி மதிப்பீடு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இம் மதிப்பீடு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறமுன் வரியிறுப்பாளர் சங்கத்துடன் கலந்தாலோசிக்க வேண்டுமெனக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிராமசபை எல்லைக்குட் பட்ட சந்தைகளுக்கு பொது மலசலகூடம் நிறுவ வேண்டுமென்று உடுப்பிட்டிக் கிராம சபையிடம் கோருவதெனவும் இது சம்பந்தமாக உடுப்பிட்டி எம். பி.யுடன் கலந்தாலோசிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இப்பொதுக் கூட்டம் உடுப்பிட்டி விநாயகராலய முன்றலில் திரு வீ. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. [உ]

## மொழிபுரியாத கஷ்டம்

[வேலணை]

இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தினரால் வெளியிடப்பட்டுவரும் மருந்துகளின் பெயர்ப் பட்டியல் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே வெளியிடப்பட்டு வருகின்றன.

இதனால் சிங்களம், ஆங்கில மொழிகள் தெரியாத தமிழ் வைத்தியர்கள் குறிப்பிடப்பட்ட மருந்துகளின் பெயர்களை தக்கமுறையில் தெரிந்து கொள்ள முடியாமல் வேறு ஒருவரின் உதவிகளை நாடிச் செல்ல வேண்டிய கஷ்ட நிலைக்குள்ளாக வேண்டியுள்ளது. [உ]

## யாழ். லீக்கின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே, வருடாந்தம் நடாத்தப்படும், உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, இம்மாதம் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படிப் போட்டி 'ஏ' பிரிவு, "பி" பிரிவு எனப்பிரிக்கப்பட்டு நடாத்தப்படும். இப் போட்டிக்கான, சகல ஏற்பாடுகளையும், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு. ஏ. தேவராசா தற்போது மேற்கொண்டு வருகின்றார். (ஆ)

## கும்பாபிஷேகம்

[சுழிபுரம்]

மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோயில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 4-ம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. நேற்றுமுதல் கிரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. கும்பாபிஷேக நிகழ்ச்சியைத்தொடர்ந்து நாற்பத்தைந்து தினங்கள் திருவிழா இடம்பெற்று இறுதிநாள் மண்டலாபிஷேகம் நடைபெறும். [இ]

# 'பெற்றோர் கஷ்டத்தை மாணவர்கள் உணரவேண்டும்''

## யாழ். அரசாங்க அதிபர் அறிவுரை

[யாழ்ப்பாணம்]

''மாணவர்கள் தமது பாடசாலைக்கு நற்பெயர் பெற்றுத் தரக் கூடியதாக விடாமுயற்சியோடு கல்வி பயிலவேண்டும். அப்போதுதான் மாணவர்கள் தமது வாழ்க்கையில் முன்னேறலாம்.''

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசேப் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், ''மாணவ சமுதாயத்தின் குறைகளைப் போக்கவேண்டும். மாணவர்களின் பிரச்னைதான் இன்று நாட்டில் வளருகின்றது. மாணவர்கள் தமது பெற்றோரின் கஷ்டங்களை உணர்ந்து கல்வியில் கவனம் செலுத்தவேண்டும். பெற்றோர் தம்மை எவ்வளவோ கஷ்டங்கள் மத்தியில் கல்வி பெற அனுப்பிவைக்கின்றனர் என்பதை மாணவர்கள் உணரவேண்டும்'' என்றார்.

இவ்வரவேற்பு வைபவம் கல்லூரி அதிபர் வண. பிதா. ஜே ஏ. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது. மாணவர் தலைவன் செல்வன் ரோமி. சௌந்தரநாயகம் நன்றியுரை நிகழ்த்தினார்.

(உ. நி. (உ)

---

# 'முதலாளித்துவ சக்திகளே தமிழ்நாடு கோருகின்றனர்'

## மேதினக் கூட்டத்தில் செந்தில்வேல் பேச்சு

(வண்ணார்பண்ணை)

''இன்று இலங்கையில் தொழிலாள வர்க்கத்தின் குரலை அடக்குவதற்கு வர்க்க ரீதியாக முதலாளித்துவ சக்திகள் ஜே. ஆரின் சர்வாதிகார போக்குகளுக்கு உடந்தையாகியிருந்து வருகின்றன. இந்த முதலாளித்துவ பிற்போக்குச் சக்திகளின் பிடியிலிருந்து தொழிலாளவர்க்கம் விடுபட தொழிற் சங்கங்களும், தொழிலாள. விவசாய மக்களும் ஒற்றுமையாக அணிதிரளவேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ளது.''

இவ்வாறு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடந்த கூட்டுத் தொழிற் சங்கங்களின் ஐக்கிய மேதின விழாவில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. சே. செந்தில்வேல் பேசுகையில் தெரிவித்தார்.

இச்சம்மேளனத்தின் வட பிரதேசப் பிரமுகர்களில் ஒருவரான திரு கே. ஏ.. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும், இடதுசாரி இயக்கங்களைச் சார்ந்த தொழிற் சங்கங்களின் பிரமுகர்களும் உரையாற்றினர்.

திரு. செந்தில்வேல் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''தமிழ்ப் பேசும் இனம் இந்த நாட்டில் சுய நிர்ணய உரிமையுடைய இனமாக வாழவேண்டும்; தமிழ் மொழிக்கும் இந்த நாட்டில் அரச மொழி அந்தஸ்துக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணம், ஆசை, உணர்வுகள் எந்த ஒரு தமிழனுக்கும் இருக்கத்தான் செய்கிறது அது தனி ஒரு கட்சிக்கு மட்டும் உரியதல்ல. ஆனால் தமிழ்நாடு என்ற கோஷங்கள் மூலம் முதலாளித்துவ இலக்கங்கள் தொழிலாள சமுதாயத்தை நசுக்கி ஆட்சி நடத்த நாம் அனுமதிக்க முடியாது.

''இன்று தனிநாடு பெற்றுத் தருவோம் என்று குரல் கொடுத்தவர்கள் கொழுத்த முதலாளித்துவ ஆட்சி அமைக்கப்பட்டதும் வர்க்கரீதியான உறவுகளை ஏற்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது.

நாம் தொழிலாள விவசாய ஆட்சி ஒன்றை விரும்புவோமே தவிர முதலாளித்துவ அமைப்பை எதிர்த்தே தீருவோம்.

''தமிழ் இனத்தைத் திசை திருப்பி இன்றைய முதலாளித்துவ சர்வாதிகார ஆட்சிக்கு மறைமுக ஒத்துழைப்பைக் கொடுத்து வர்க்கரீதியான உறவுகளை வலுப்படுத்த சில அரசியல் வாதிகள் முயலுகின்றனர். இவர்களது உதவியுடன் எமது தொழிலாள வர்க்கத்தின் உரிமைக்குரலை நசுக்க திட்டமிட்டு வரும் அரசுக்கெதிராக மீண்டும் ஒரு 1953 உருவாக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டே தீரும்.

### உறவு வலுத்துவிட்டது

''தமிழ்நாடுதான் இறுதி மூச்சு என்றவர்கள் இன்று ஐக்கியதேசியக்கட்சி வந்ததும் அங்கு உறவு வலுத்துவிட்டது. இங்கு இளைஞர்களை ஏமாற்றுவதற்காக தமிழ்நாட்டுக்கோஷம். இது இன விடுதலை இயக்கம் என்று கூறினால் நாம் வெட்கப்படாமல் இருக்க முடியாது. தமிழ்மக்கள் மத்தியில் இந்த வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு இடைவிடாத அனுதாபக்கூட்டங்கள், வரவேற்புக் கூட்டங்கள் நடத்தி அடுத்த தேர்தல் வரை மக்களைத் திசைதிரும்பாமல் பார்த்துக்கொள்ள முதலாளிகள் பணம் கொடுத்து உதவி வருகின்றனர்.

### தொழிலாள வர்க்கம் சிந்திக்கவேண்டும்

'தொழிலாளிகளுக்கு ஒழுங்கான சம்பளம் கொடுக்காத ஒரு முதலாளி செந்தமிழர் இயக்கத்திற்கு ஆயிரக்கணக்கில் பணம் கொடுக்க முற்பட்டால் இந்த நன்கொடையின் நோக்கம் என்ன என்பதைத் தொழிலாளவர்க்கம் சிந்திக்கவேண்டும்.

வாக்களித்து அனுப்பிய மக்கள் பஸ் வண்டியில்லாமல் கஷ்டப்படுகின்றனர். ஆனால் எம்.பிக்களுக்கு புதிய ஜீப் வண்டிகள் கொடுக்கப்படுகின்றன. முதலாளிகளின் சுகபோகங்களுக்காக இறக்குமதிசெய்யப்பட்டிருக்கும் பொருட்களை இன்று எந்த ஒரு தொழிலாளியும் வாங்கமுடியாது''

வர்த்தக ஊழியர் சங்கத்தின் சார்பில் உரையாற்றிய பிரபல புரட்சிப்பேச்சாளரான திரு. பி. பானுதேவன் பேசுகையில் கூறியதாவது:

### மக்களை ஐ. தே. க. மறந்துவிட்டது

''விலைவாசியைக் குறைப்போம், 8 றாத்தல் உணவு வழங்குவோம் என்றெல்லாம் வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிக்கு வந்த ஐ. தே. கட்சி இன்று இந்த நாட்டில் உள்ள மக்களை மறந்து முதலாளிகளை வளர்க்க திட்டமிட்டுள்ளது.

''கடந்த காலத்தில் நடந்த ஊழல்களையும் அநீதிகளையும் எதிர்த்துத்தான் மக்கள் இன்றைய அரசை ஆட்சிக்கு அனுப்பினர். ஆனால் இன்னும் சிறிமாவைப் பற்றியும், பீலிக்ஸைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. சிறிமா வேடிக்கை காட்டிக்கொண்டு மக்களிடமிருந்த அரிசிபைக்கட்டுப்புத்தகத்தை 'பிற்போக்கற்' அடித்தார்கள். பீலிக்ஸ் வேடிக்கை காட்டிக்கொண்டு சீனிப்பங்கீட்டில் கைவைத்தார்கள். இப்படி கடந்த ஆட்சிக் காலத்தில் உள்ளவர்களை வைத்து இப்போதும் குடிகாட்டிக்கொண்டு மக்களின் வாழ்க்கையில் கைவைக்கத் தொடங்கிவிட்டனர் இன்றைய ஆட்சியாளர்கள்.

''ஆசிய நாடுகளில் 30கோடி மக்கள் வேலையின்றி இருக்கின்றனர் உலகவங்கி இதற்கு என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடுகிறது. இங்கு 12 லட்சம் வேலையற்றவர்கள் இருக்கும்போது இவர்கள் திட்டமில்லாமல் இந்திக்கத் தொடங்கிவிட்டனர். தேசியமயமாக்கப்பட்ட உடைமைகள் முதலாளிகளிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன இது இந்த நாட்டு மக்களின் பொருளாதாரத்தை அழித்து முதலாளித்துவத்தை வளர்க்கச்செய்யும் நடவடிக்கையாகும்.

### தமிழர் பிரச்னை இதுவரை ஒன்றும் தீர்க்கப்படவில்லை

''தமிழ் மக்களின் பிரச்னைகள் ஒன்றும் இதுவரைதீர்க்கப்படவில்லை தமிழினத்தின் பிரச்னைகளைத் தீர்ப்போம் என்று கூறி தேவையானவர்களைத் தமது கைக்குள்போட்டுவிட்டனர். ஆனால் சிங்களத் தேர்ச்சியின்மையால் இன்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையிலிருக்கும் பலதமிழ் ஊழியர்கள் சம்பள உயர்வோ, பதவி உயர்வோ பெறமுடியாத நிலையில் இருக்கின்றனர். இந்த ஆட்சியை கட்டிப்பிடித்துக்கொள்ள முயலும் தமிழ் முதலாளிகள் கடைகளில் தமிழ் தொழிலாளிகள் கசக்கிப் பிழியப்படுகின்றனர். தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. இந்த முதலாளிகளில் சிலர்தான் தமிழ் மக்களின் வீரவரலாறுகளையும் கூறுகின்றனர். நாளாந்தம் இவர்களின் தொழிற்சாலைகளிலும், கடைகளிலும் வேலை செய்யும் தமிழ் இளைஞர்கள் பத்து மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்து களைப்படைகின்றனர். போதிய ஊதியமின்றி சரியான உணவு பெறமுடியாத கஷ்டங்களை அடைகின்றனர். இந்த நிலையில் இந்த ஊழியர்கள் தமிழ் நாட்டுக்கு போராட முடியுமா?'' (அ)

---

### சனசமூக—

[2-ம் பக்க தொடர்ச்சி]

கள் நல்ல முறையில் பயன்படுத்திப் பலன் பெறவேண்டும்' என்றார்

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அலெபிரட் பேசுகையில், அரசாங்கத்திற்காகவோ, அரசாங்க அதிகாரிகளுக்காகவோ மக்கள் இயங்குவது தான் இயக்கம். கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள் இயங்குகின்றன என்றால் அவை அவ்வப் பகுதி மக்களின் நன்மைகளுக்காகவே என்றார். [உ]

---

# ''அமிரின் தலைமை கிடைத்தது தமிழர் அதிர்ஷ்டமே''—வி. பி.

[யாழ்ப்பாணம்]

''இன்று தமிழ்மக்கள் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க காலகட்டத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். தமிழ் ஈழத் தேசிய இனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் இத்தகைய ஒரு நெருக்கடிமிக்க சந்தர்ப்பத்தில் தலைமைதாங்க கிடைத்திருப்பது மிகவும் அதிர்ஷ்டவசமானது''

இவ்வாறு செந்தமிழர் இயக்க பொதுச்செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கத்தின் அறிவு, கொள்கைத் தெளிவு, நிதானபுத்தி, தொழிலாளி வர்க்கத்தின்மீது கொண்ட நம்பிக்கையும் அவர் அறிவியல்பாற்பட்ட சோஷலிஸ சமூக அமைப்பு ஒன்றை தமிழ் ஈழத்தில் காணவேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்ட ஒர் அருந்தலைவர் அவர்

போராட்டப் பண்புள்ள இளைஞர் சக்திகளும் விவசாயிகளும் உரிமைபோரும் சமூகப் பிரிவினரும் அவரின் தலைமையை நம்பிக்கையுடன் நோக்குகின்றனர்'' என்றார் வி. பி. (கா. உ)

---

### யாழ் கச்சேரி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 47) ஆதேவிடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஆழ்வாப்பிள்ளை (வயது 58) அச்சுவேலியைச் சேர்ந்த சதாசிவம் ராமச்சந்திரன் ஆகியோரே தயாலதிபர்களாக நடித்தவர்கள் என்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஏற்கனவே அரசாங்கலிகிதர் பதவியிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் ஜேசுதாஸன் அல்லது பாலச்சந்திரன் (வயது 36) என்பவரே இம்மோசடியைத் திட்டமிட்டுச் செய்துள்ளார் எனப் பொலிசார் கூறுகின்றனர்.

கணபதிப்பிள்ளை ராஜதுரை, வேலன் சின்னத்தம்பி (வயது 47) நிக்கிலாஸ் ஜேசுரத்தினம் மரியாம்பிள்ளை (வயது 42) ஆகிய மூவரும் இம்மோசடிக்கு உடந்தையாக இருந்து உறுதிச்சீட்டைத் தயாரித்துக்கொடுத்தவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இச்சந்தேகநபர்களைக் கைது செய்த யாழ் விசேஷ புலன் விசாரணைப் பொறுப்பதிகாரி திரு. இ. அப்பையா யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிபதி திரு நவரத்தினம் முன்னிலையில் ஆஜர்செய்தபோது சந்தேகநபர்களை இம்மாதம் 11ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இதுதொடர்பான விசாரணைகளை திரு. அப்பையா தொடர்ந்து நடத்திவருகிறார். (கா)

---

### தமிழகத்தில்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ர இனக்கலவரம் நடைபெற்றது. தமிழர்கள் ஒன்று சேர்ந்துவிட்டார்கள் என அஞ்சிய சிங்களமக்கள் காவல்துறையினரை ஏவிவிட்டு தமிழர்களை இம்சித்தனர்; தமிழர்களுக்கெதிராக தாங்கொணாக் கொடுமைகள் இழைக்கப்பட்டன.

அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையில் பேரணி ஒன்றைநடாத்திதமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டித்து குரல் கொடுத்தது,

இலங்கைத் தமிழர்கள் கடந்த 30 ஆண்டுகளாக உரிமைக்காகப் போராடுகிறார்கள். ஆனால் ஐ. நா சபையில் இது பற்றிக் குரல்கொடுக்க இன்று எவருமே இல்லை. இந்திய அரசு இவ்விஷயத்தில் தலையிட்டு ஐ நா. மூலம் இலங்கைத் தமிழர்களின் உரிமையைப் பெற்றுத்தரவேண்டும்.''

திரு. பெருஞ்சித்திரனார் பேசுகையில் கூறியதாவது:-

ஈழத்தமிழர் உரிமைக்காக தமிழர் வாழ்நாள் முழுவதும் போராடிய பெருமகன் தந்தை செல்வா தமிழ்மக்கள் தங்கள் வரலாற்றுப் பெருமையினை, மொழியின் சிறப்பினை, உரிமைகளை நினைத்துப்பார்க்க வேண்டிய நாள் இந்நாளாகும்.

இலங்கையில் வாழுகின்ற தமிழர்கள் பூர்வீக குடியினர். இதற்கு வரலாறு உண்டு. என்றோ ஒருநாள் அவர்கள் தமது உரிமைப் போராட்டத்தில் நிச்சயம் வென்றே தீருவார்கள். என்றார். (கெ-இ)

---

### மக்கள்—

[1-ம் பக்க தொடர்ச்சி]

மக்கள் வங்கியிலும், இலங்கை வங்கியிலும் தலா ஆயிரம் எழுதுவினைஞர்களையும் நியமிப்பதென அரசு முடிவு செய்து நேர்முகப் பரீட்சையையும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

பின்னர் வங்கி ஊழியர் சங்கம் வங்கி நிர்வாகத்தினருக்கு எதிராகத் தொடர்ந்திருந்த வழக்கை. அடுத்து நீதிமன்றம் விடுக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையினால் இந்த நியமனம் தடைப்பட்டிருந்தன. (இ)

---

# திருட்டுக்கள் அதிகரிப்பு

(உடுப்பிட்டி)

கரவெட்டி, நெல்லியடிப்பகுதிகளில் இரவு வேளைகளில் துணிகரத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகப் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் க்காக அதன் பணிப்பாளர்களால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram 'Eenaadu' Telephone 389 Registered as a Newspaper in SriLanka